முருகப்பெருமான் துணை

**மகான் கனராமர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

27.05.2023, சனிக்கிழமை

1. ஞானச்சுடரே அரங்கனே
ஞானிகளை கலியுகத்திலும்
ஞானவழி வழிநடத்தி அமைத்திட
ஞானமருளும் ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமைகூறி
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
ஆசிபட சோபகிருது விடைதிங்கள்
அறிவிக்க முன்னான்கோர் திகதி காரி வாரம்

(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 13ம் நாள், 27.05.2023, சனிக்கிழமை)

3. வாரமதில் கனராமர் யானும்
வழங்குவேன் உலகம் நலம்பெற
சோரமில்லா ஞானவான்கள்தனை
செகமெல்லாம் உருவாக்க வேண்டி
4. வேண்டியே அவதாரம் எடுத்து
வேலவன் சக்தியாக அருளும்
தொண்டுமிக்க அறநெறிகள்தனை
தெய்வநெறியாக மக்கள் ஏற்று
5. ஏற்று ஞானவழித் தொடர
இணங்கி அன்னதான சேவையை
ஆற்றல்பட உலகமெல்லாம் செய்து
அறம்தனை வளர்த்து வருக
6. வருகவே உலகம் எங்கிலும்
வளரும் தரும வடிவிலே
அருளும் பொருளும் ஆற்றலாக
ஆறுமுகப் பெருமான் ஆசியாக
7. ஆசியாக அவரவர்க்கும் சக்தி
அளவிலா கிட்டி இனிதே
நேசமுள உயிர்காக்கும் வண்ணம்
நீதிநிர்வாகம் ஆளுமை சிறந்து

8. சிறந்து உலகமாற்றம் ஆக
செப்பிடுவேன் தொண்டு வழி
பரந்த நோக்கம் தயவுகொண்ட
பதவியாளர்களாகப் பெருகி

9. பெருகியே அரங்கன் விரும்பும்
பெருந்தன்மை கொண்டநல்
தருமஞான ஆட்சிக் காலமாக
தக்கபடி மாற்றம் கண்டு

10. கண்டுமே மக்கள் படைகள்
கந்தவேலன் ஆசி பெற்ற
தொண்டு மிக்க ஞானிகளாக
தேசிகன் வழிகாட்டல் வழி

11. வழிதனில் உயர்ந்து சிறந்து
வல்லமை கொண்ட ஞானஆட்சி
உலகினில் படைத்து சிறப்பர்
உரைத்திட்ட அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—